அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் ந.வடிக்கை தொடர தனி அலுவலர் அனுமதிக்கலாம்.(ந.க.எண் 0256/2019/இ2)

19. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான புதிய பஸ் நிலையம் A கிரேடு தரமுள்ளதாகும் பஸ் நிலையத்தின் உரிமத்தினை புதுப்பிக்க விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பஸ்நிலையத்தின் உட்புறம் உள்ள சாலைகள் மற்றும் பேருந்து நிறுத்தத்திலுள்ள சாலைகளை பழுது நீக்கம் செய்து செப்பனிட தார் கொண்டு பள்ளங்களை சரி செய்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4,00,000/-க்கு தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்,
2. மேற்படி பணிக்கானசெலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண் 0278/2019/இ1)

20 ஆத்தூர் நகராட்சி வார்டுஎண் 1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் உள்ள திறந்த வெளி கிணறுகளின் மின் மோட்டார்கள் மற்றும் ஆழ்துளை கிணறுகளின் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்து மற்றும் ஆண்டு பாராமரிப்பு செய்தல் பணிக்கு குடிநீரின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 28.12.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ் கண்டவாறு பெற்றதினை தனிஅலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு. ஜி. தண்டபானி ஒப்பந்தாரர்ஆத்தூர் | 0.01 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு. எ. லோகநாதன் ஒப்பந்தாரர்ஆத்தூர் | 1.62 % மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1.மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஜி.தண்டபானி ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை தனிஅலுவலர் ஏற்கலாம்.

2. மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஜி. தண்டபானி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கலாம். (ந.க.எண்4752/2018/இ2)

21. ஆத்தூர் நகராட்சி வார்டு எண் 23ல் அய்யாவு தெரு வடக்கு பகுதியில் சேலம்-கடலூர் சாலையில் இணைப்பு செய்யும் போது அப்பகுதியிலுள்ள குடிநீர் குழாயில் குடிநீர் சரி வர வருவதில்லை எனவே மேற்படி பகுதிலுள்ள 110 MM PVC குடிநீர் குழாயினை மாற்றியமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ55,000/-க்கு குடிநீரின் அவசர அவசியத்தை கருதில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு 27.12.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரபெற்றதினை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.